# மண்மணம் காக்கும் மறவர்கள்

முனைவர் இ. யுவராணி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பி.கே.ஆர். கலைக் கல்லூரி
கோபிசெட்டிப் பாளையம்

**முன்னுரை**

பொதுவாக மறவர்களெனில் வீரர்களாகிய ஆடவர்களையே குறிக்கும். அறத்தை நிலைநாட்ட விரும்பும் மறப்பண்பு உடையவர்களையே மறவர்கள் எனக் குறிக்கப்பெறுவர். போர்க்களத்தில் போரிட்டு மடிந்ததும், போரில் வெற்றியடைந்ததும் மண்ணைக் காத்த மறவர்கள் பலர் சங்க காலத்தில் புலவர்களால் பாராட்டப்பெற்றுள்ளனர். அத்தகு மறவர்களின் மாண்பு குறித்து புறநானூற்றின் வழி இக்கட்டுரையில் காண்போம்.

**மறவர்களைச் சுட்டும் சங்ககாலப் பெயர்கள்**

"ஆடுநர், அண்ணல், ஆடவர், ஊர்க்காப்பாளர், களமர், குருசில், காளை, தானைச்சான்றோர், படைஞர், பொருநர், மல்லர், மள்ளர், மழவர், மெய்க்காப்பாளர், விறலோர் போன்ற பல சிறப்புப் பெயர்களால் மறவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

**மறவர்களின் உணர்வு**

சேரமான் பெருஞ்சேரலாதன், சோழன் கரிகால் பெருவளத்தானோடு போரிட்ட போது கரிகால்வளவன், சேரலாதன் மார்பிலே எறிந்த வேல் அவன் உடலுக்குள் ஊடுருவி முதுகு வழியாகச் சென்றது. மார்பிலே எறிந்த வேல் முதுகில் புண்ணை ஏற்படுத்தியதால் சேரமான் பெருஞ்சேரலாதன் அதுவும் புறப்புண்ணுக்கு ஒப்பாகும் என்று கருதி உயிர் வாழ விரும்பாமல் வடக்கிருந்து உயிர் துறந்தான். சேரமன்னனின் இம்மான உணர்வினை,

"புறப்புண் நாணி மறத்தகை மன்னன்
வாள் வடக்கு இருந்தனன் ஈங்கு
நாள்போற் கழியல ஞாயிற்றுப் பகலே" (புறம்; 65; 10–12)

என்று புலவர் கழாத்தலையார் பாடியுள்ளார்.

**வெற்றியினும் சிறந்த பண்பு**

சேரமான் பெருஞ்சேரலாதனைப் போரில் வென்று சோழன் கரிகால் பெருவளத்தான் குறித்து வெண்ணியககுயத்தியார் புறநானூற்றில் பின்வருமாறு பாடியுள்ளார்.

"வென்றோய் நின்னினும் நல்லன் அன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலகம் எய்தி
புறப்புண் நாணி வடக்கிருந்தோனே" (புறம்; 66; 5–8)

அதாவது 'போர்க்களத்தில் எதிர்நின்று நின் வலிமை தோன்ற வெற்றி பெற்ற மன்னனே! தழைத்தலையுடைய புதுவருவாய் பொருந்திய வெண்ணி என்னும் ஊரின் போர்க்களத்தில் உலகத்துப் புகழை மிகப் பொருந்திய புறப்புண்ணுக்கு நாணம் கொண்டு வடக்கிருந்தோன் உன்னைவிட நல்லவன் அல்லனோ! என்று கூறுவதிலிருந்து போரில் அடைந்த வெற்றியைக் காட்டிலும், முதுகில் பட்ட புறப்புண்ணுக்காக வடக்கிருந்து உயிர் துறந்த நிகழ்ச்சி மறவர்களின் மான உணர்வை வெளிக்காட்டுகிறது.

**தோல்வியெனின் அடையும் துயரம்**

பாண்டியன் நெடுஞ்செழியனோடு போரிடுவதற்கு அவனுடைய பகைவர்கள் வருகின்றனர். பாண்டியனும் போருக்குப் புறப்படுகிறான். அப்பொழுது எதிர்த்து வரும் பகைவரை வெல்லாமல் போனால் தனக்கு எப்படிப்பட்ட இழிநிலை வரும் என்பதைப் பாண்டியன் கூறுகிறான். 'என் சுற்றத்தார் போன்றோர் மிக்க துயரமுறும்படியாகவும், என்னிடம் வந்து இரப்போக்கு இல்லையென்று சொல்லும்படியாகவும் உள்ள இழிந்த வறுமை நிலையை நான் அடைவேனாக என்று பல இழிநிலைகளைக் கூறி வஞ்சினத்துடன் முடிக்கின்றான்.

"புறப்போர் புன்கண் கூர
இரப்போர்க்கு கீயா இன்மையான் உறவே" (புறம்; 72; 17–18)

அதாவது பிறர்க்கு கொடுக்க இயலாத நிலையே மிகவும் இழிவானது என்பதை மேற்கண்ட அடிகளால் உணரலாம்.

**சான்றோர்களாக காட்சியளிக்கும் மறவர்கள்**

மறவர்களைப் புலவர்கள் 'சான்றோர்கள்' எனப் போற்றுவதும் உண்டு. மன்னருக்கு இணையாக நின்று போர்க்களத்தில் போரிட்டு வென்று சிறப்படைந்தோறும் மன்னர் மறுத்தும் கேளாது போரிட்டு வீரமானம் அடைந்தோறும், மண்ணைக் காக்க உயிரைத் தியாகம் செய்தோறும் எனச் சான்றோர்களாக விளங்கிய மறவர்கள, இலக்கியங்களில் சிறப்பாகக் கூறப்பெற்றுள்ளனர்.

"தேர்தர வந்த சான்றோர் எல்லாம்
தோல்கண் மறைப்ப ஒருங்கு மாய்ந்தனரே" (புறம்; 63 5–6)

என்ற மறவர்களைச் சிறப்பித்துப் பரணர் பாடியுள்ளார்.

**மன்னரும், மறவரும்**

மன்னர்கள் மறவர்களைத் தமக்கு இணையாகவே வைத்து எண்ணியுள்ளனர். மன்னர்கள் போர்க்களம் புகும்முன் வஞ்சினம் கூறும்பொழுது தம்மை மறவர்களாக நினைத்துக்கொண்டு வஞ்சினம் கூறியுள்ளனர்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்,

"நெடுநல யானையும் தேரும் மாவும்
படை அமை மறவரும் உடையம் யாமென்று
உறுதுப்பு அஞ்சாது" (புறம்; 72; 4–6)

என்று சினந்து கூறியுள்ளான், மறவர்களின் துணையுடன் பகைவர்களை வெல்லாமல் தோற்றுப்போவேனாயின்,

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை" (புறம் ;72; 13–16)

என்ற அடிகளின் மூலம் உயர்ந்த தலைமையுடனே மேன்மையான கேள்வியுடை மாங்குடி மருதன் முதலாக உலகத்தில் நிலைபெற்ற பலரும் புகழும் புலவர் என் நாட்டைப் பாடாது ஒழிக என்று கூறியுள்ளான். தம்மையும். தம்மைச் சார்ந்த மறவர்களையும் இணைத்தே வஞ்சினம் கூறியுள்ளான்.

**பகைவர்களே வலிமை**

கிள்ளிவளவன் தம் மறவர்களுடன் பகை நாட்டிற்குள் நுழைந்து, பகைவர்கள் இல்லாமல் காவல் மரத்தை வெட்டுகிறான். போர் என்றால் மறவர்கள் எதிரிலிருந்து போரிட வேண்டும். அப்படி இல்லையாயின் மரத்தை வெட்டுவது கோழைத்தனம் என்கிறார் புலவர்.

"கடிமரம் தடியும் ஓசை தண்ஊர்
நெடுமதில் வரைப்பின் கடிமனை இயம்ப
ஆங்குஇனி திருந்த வேந்தனொடு ஈங்குநின்
சிலைத்தார் முரசம் கறங்க
மலைத்தனை என்பது நாணுத்தகவு உடைத்தே" (புறம்; 36; 9–13)

என்ற அடிகளிலிருந்து எதிரில் பகைவர்கள் பகைக் கொண்டு இருந்தாலே அது தமக்கு வலிமை என்று கொண்டு சங்க கால மறவர்கள் போரிட்டனர் என்பதை உணரலாம்.

**மறத்தில் அறம்**

பண்டைய மக்களின் போரிலும் இரக்கவுணர்வு மேலிடுகிறது. போர்த்தொடுப்பதற்கு முன்னே பகைவன் நாட்டிலுள்ள பசுநிரையும், அந்தணரும், பெண்டிரும், பிணியாளரும், புதல்வனில்லாதோறும் அகன்று செல்லுமாறு பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி அறிவித்துள்ளான். இதனை,

“ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்என
அறத்துஆறு நுவலும் பூட்கை” (புறம்; 9; 1–6)

என்று புலவர் நெட்டிமையார் பாடியுள்ளார்.

**மக்களைக் காக்கும் மறவர்கள்**

மக்கள் சமூகத்தில் பாதுகாப்பதற்கு வாழ மறவர்கள் பாதுகாப்பு தந்தனர். மக்கள் கவலையில்லாமல், அச்சமில்லாமல் வாழ காக்கும் தெய்வங்களாகக் காளை போன்ற மறவர்கள் விளங்கினர் என்பதை,

“புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன மாதோ போர்க்களத் தானே” (புறம்; 86; 4–6)

என்ற அடிகளால் அறியலாம்.

வீரப்போர் செய்து புகழ்பெற்ற மறவன், பகைவரிடத்திலிருந்து மக்களைக்காப்பது, மழை பெய்யும் போது நம்மைக்காக்கும் பனை ஓலைக்குடைக்கு ஒப்பாகக் கூறப்படுகிறது. ஆகவே மறவர்கள் மக்களைக் காக்கும் இயல்பை,

“மறப்புகழ் நிறைந்த மைந்தினோன் இவனும்
உறைப்புழி ஓலை போல
மறைக்குவன் பெருமநிற் குறித்துவரு வேலே” (புறம் ;290; 6–8)

என்று ஔவையார் பாடியுள்ளார்.

**முடிவுரை**

மறவர்கள் மிகச்சிறந்த வீரர்கள் ஆவர். அவர்கள் தம் உயிரைப் பெரிதென எண்ணாது மண்ணிற்காக அரும்பாடுபட்டவர்கள். சங்க காலப் போரில் மனித மாண்பையும், அறத்தையும் பின்பற்றிய பெருமை சங்க மறவர்களையே சாரும். புறநானூறு, மறவர்களின் மாண்பினை எடுத்துப்போற்றும் சிறந்ததொரு ஆவணமாகும்.